# இலக்கியத் தூறல்




தொகுப்பாசிரியர்

முனைவர் **இரா.விஷ்ணுப்பிரியா**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி)

என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

# பொருளடக்கம்


1. பாரதி கண்ட கல்வி — 7
டாக்டர் ந.சுப்புரெட்டியார்

2. தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள் — 16
முனைவர் இரா.ஜெயந்தி

3. சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிர்களின் வாழ்வியல் — 23
முனைவர் செல்வராஜ் ஜமுனா

4. பன்னிரு திருமுறைகளால் விழையும் அறங்கள் — 28
முனைவர் ந.பிரகாஷ்

5. துறவி தந்த கலைகள் — 34
முனைவர் பா.அருள்ஜோதி

6. மாணிக்கவாசகரின் பக்தி நெறி — 41
முனைவர் ந. ஜெயசுதா

7. அப்துல்ரகுமான் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் — 48
முனைவர் த.கீதாஞ்சலி

8. 'எரியும் பனிக்காடு' உணர்த்தும் தேயிலைத் தோட்ட வரலாற்றுப் பின்னணி — 56
முனைவர் த.பரமேஸ்வரி

9. நாட்டுப்புறவியலும் நம்பிக்கைகளும் — 63
முனைவர் ச.முத்துவேல்

10. கலைச்சொல் பயன்பாட்டு நிலை — 71
முனைவர் மு.சுகந்தி

# 7

# அப்துல்ரகுமான் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் த.கீதாஞ்சலி

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுமையும் வளமும் வனப்பும் சேர்த்த இலக்கியப் பிரிவுகளில் புதுக்கவிதைக்கு முக்கிய இடமுண்டு. புதிய முயற்சியாய்த் தோன்றி, சோதனை முறையில் வளர்ந்து, தனக்குரிய இடத்தை வலுவாக அமைத்துக் கொண்ட இலக்கிய வடிவம் புதுக்கவிதை எனலாம். ‘சொற்களின் கனவு கவிதை’ எனக் கூறலாம். கவிதை என்ற சொல்லை ஆராய்ந்து பார்த்தால், கவி என்பது புலவனைக் குறிக்கும். கவிதை என்றால் செய்யுள் அல்லது பாட்டு என்பதைக் குறிக்கின்றது. இந்தக் கவிதையில் விதை என்பது ஒரு புலவன் கொண்டுள்ள ஆன்ம உணர்வுகளையும், எண்ண உணர்வு களையும் வெளிப்படுத்துகின்ற பாடல்களைக் குறிக்கின்றது. மனித மனத்தின் எண்ணற்ற பாடுபொருளினை விதைப்பதாகக் கவிதை அமைகிறது எனலாம்.

## கவிக்கோ அப்துல்ரகுமான்

கவிக்கோ அப்துல்ரகுமான் 1937ஆம் ஆண்டில் மதுரையில் பிறந்தார். இவர் நிகழ்கால உண்மைகளைத் தம் படைப்பில் படம் பிடித்துக்காட்டிச் சிந்திக்கத் தூண்டும் கவிதைகளை இயற்றுவதில் வல்லவர். இன்று நம் நாட்டில் புதுக்கவிதைகளைப் பாடும் கவிக்குயில்களாகப் பலர் விளங்குகின்றனர். அவர்களுள் ஒருவராய் ஒப்பற்றவராய் விளங்குபவர். இவர் வானம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் பேராசிரியராய் இருந்து பணி ஓய்வு பெற்றவர்.

கவிக்கோ பட்டம் பெற்ற இவர் தமிழக அரசின் பாரதிதாசன் விருது, தமிழ் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருது முதலிய விருதுகளைப் பெற்றவர். உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று இலக்கியம் தொடர்பான சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். இவர்தம் கவிதைகள் பால்வீதி, நேயர்விருப்பம், சொந்தச் சிறைகள், கரைகளே நதியாவதில்லை, சுட்டுவிரல், விலங்குகள் இல்லாத கவிதை

போன்ற பல கவிதைத் தொகுப்புகள் நூல்களாய் வெளிவந்துள்ளன. இவரது ஆலாபனை என்ற கவிதை நூலுக்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி பரிசு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

"நான் கலீல் ஜிப்ரானைப் படிக்கும் போதெல்லாம் தமிழில் இப்படி எழுத யாருமில்லையே என்று ஏங்குவேன். அந்த ஏக்கம் இப்போது இல்லை. இதோ! அப்துல்ரகுமான் வந்துவிட்டார். இவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துவெளியிட்டால், யார் இந்தக் கவிஞன்? என்று உலகம் நிச்சயம் விசாரிக்கும்" என்று கவியரசு கண்ணதாசனால் பாராட்டப் பெற்றவர்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைகூ, கஸல், தாவோ, நஜ்ம், சூஃபி எனக் கவிவானில் வலம்வந்து மக்களின் சிந்தனைக்கு உரமிடுபவர். "எங்கெல்லாம் நன்மை நலிந்து தீமை செழிக்கிறதோ அங்கெல்லாம் கவிதை அவதாரம் கொள்கிறது" என்று தன் கவிதைகளுக்குப் புது அரிதாரம் பூசியவர். 'கவிதை கடவுளின் மொழி.... அதனால்தான் வேதங்கள் எல்லாம் கவிதையாக இருக்கின்றன. இரவின் இருளில் புல்லின் மீது இரகசியமாய்த் திரளும் பனித்துளியைப் போல் கவிதை கவிஞனிடம் உதிக்கின்றது' என்றெல்லாம் கவிதைக்குப் புதுவிளக்கம் எழுதியவர். தமது படைப்புகளில் சமுதாயச் சீர்கேடுகளை ஆணித்தர மாகச் சுட்டிக்காட்டிச் செல்வதில் வல்லவர். இவரின் சுட்டுவிரல் கவிதைத் தொகுப்பில் காணப்படும் சமுதாயம் குறித்த கருத்தாக்கங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சமூகம் -சொல்லாராய்ச்சி**

நாகரிகம் தோன்றாக் காலத்திலேயே ஆதிமனிதர்கள் தங்களை இயற்கையிலிருந்தும், விலங்குகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள குழு வாழ்க்கையை மேற்கொண்டனர். சமூகம் எவ்வகையான கட்ட மைப்பைக் கொண்டது என்பதற்கு, "கூட்டு வாழ்வுக்குழு, மண்ணாயம், நட்புக்குழு சேர்க்கை, தோழமை, தொகுதி குடிமைப் பண்புடை யோர்குழு" என்று ஆங்கிலத் தமிழகராதி விளக்கம் தருகிறது. "தமிழ்ச் சொல்லகராதி சமூகம் என்ற சொல்லுக்கு 'மக்கள் திரள்' (Company Assembly)" என்று பொருள் தருகிறது.

டாக்டர் மு.வ., "ஒவ்வொரு மனிதனும், ஏனைய மனிதனுடன் கொண்டிருக்கும் சமூக உறவுமுறைத் தொடர்புகளைத்தான் சமூகம் என்கிறோம். சமூகவியல் அல்லது சமூகம் புலனாகா உளசார்புடையக் கருத்தியல் ஆகும்" எனக் கூறுகிறார்.

"சமுதாயம் என்பது பல்வேறு சமூக நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு விளங்கும் சமூகக் கட்டமைப்பு" என்பார் சி.இ.மறைமலை. இவற்றிலிருந்து பல்வகையான சமூகக் கூட்டுறவின் பயனே மனிதச்சமுதாயம் என்பது புலனாகிறது. மேலும் மனிதன் தன்னந்தனியாக வாழ்பவன் அல்லன். அவனுடைய வாழ்வு சமுதாயச் சூழல்களாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்பதும் புலனாகிறது. மக்கள் சமுதாயத்தில் கூடிவாழும்போது பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதும் தெளிவாகிறது.

## இலக்கியமும் சமுதாயமும்

"இலக்கியம் ஒரு சமுதாய நிறுவனம்" (Literature is a special Institution) என்பர். சமுதாயத்தின் நிகழ்வுகளைக் கண்டு தாக்கமுற்றப் படைப்பாளன், தாக்கத்தின் விளைவால் படைப்புக்களை ஆக்குகிறான். எனவே, சமுதாயத்திலிருந்தே இலக்கியம் தோன்றுகிறது எனலாம்.

## சுட்டுவிரல்

கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் நாகரீகத்தையும் சீரழிக்கும் மனிதர்களைச் சுட்டிக்காட்டும் உன்னத நூல் சுட்டுவிரலாகும்.

"யாரையும் குறிப்பிடுவன அல்ல என்ற கோழைப் பொய்யில் ஒளிந்து கொள்ள நான் விரும்பவில்லை. குறிப்பிட்டவர்களை குறிப்பிட்டவைகளை நோக்கியே என் சுட்டுவிரல் நீண்டிருக்கிறது" என்ற படைப்பாளியின் கூற்று படைப்பாளியைச் சமூக மறுமலர்ச்சி விரும்பியாக அடையாளம் காட்டியுள்ளது. இக்கவிதைத் தொகுப்பில் ஒவ்வொரு கவிதையும் சமுதாய அவலங்களை நேர்த்தியாகச் சுட்டிக்காட்டுகின்றது.

## வறுமை நிலை

சமுதாயத்தில் மிகவும் கொடுமையானது வறுமை. இது மனிதனை அழிக்கும் வன்மை பெற்றது. நம் பாரத நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே மக்கள் ஏழை, பணக்காரர் என்று பாகுபட்டுள்ளனர். இந்தப் பாகுபாட்டினைப் பெரும்பான்மையான கவிஞர்கள் தம் கவிதைகளில் சுட்டிக்காட்டியுள்ளனர். அவ்வகையில் கவிக்கோ உண்ண உணவின்றி தவிக்கின்ற ஏழை மக்களின் நிலையினை,

**"சுதந்திர தினவிழாவில் ஜன கண மன பாடிக்**
**கொண்டிருந்தார்கள் நான் பசியால் சுருண்டு**

படுத்துக் கொண்டிருந்தேன் எழுந்து நிற்க
முடியவில்லை தேசிய கீதத்தை அவமதித்ததாகச்
சிறையில் அடைத்து விட்டார்கள்'' (சுட்டுவிரல், ப.12)

என்ற கவிதையில் எடுத்துக்காட்டியுள்ளார். உணவின்றிப் பசியால் வாடும் மனிதனுக்கு ஏற்படும் அவலநிலையினையும் அதிகார வர்க்கத்தினரின் ஆணவப்போக்கையும் அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

## குழந்தைத் தொழிலாளர் நிலை

இந்திய நாட்டின் இரும்புத் தூண்களாக, இதயத் துடிப்புகளாகக் கருதப்படும் பிஞ்சுக் குழந்தைகள் தொழிலாளர்களாய்த் துவண்டு கிடக்கும் கொடுமையினைச் சமுதாயப் பார்வைக்குக் கொண்டு வருகிறார் கவிஞர். வறுமையின் காரணமாகக் கொடுமையை அனுபவிப்பது பெரியவர்கள் மட்டுமல்ல. இன்றைய வாழ்க்கைச் சூழலில் சிறுகுழந்தைகளும் கூட அதற்கு அடிமையாகின்றனர். கல்வி கற்க வேண்டிய வயதில் மகிழ்ச்சியை ரசித்து அனுபவிக்க வேண்டிய பருவத்தில் இருண்டுபோன வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக் கிறார்கள். இதனால் அவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகிறது. இந்நிலையை,

"பல்ப்பம் பிடிக்க வேண்டிய / சின்னஞ்சிறு விரல்களில்
தீக்குச்சிகள் /வெளிச்சத்தைக் கற்கும் பருவத்தில்
யாருடைய வெளிச்சத்திற்காகவோ /இவர்களே
தீக்குச்சிகளாகி விட்டார்களே /எதிர்காலத்தின் ஒளிவிளக்குகள்
........................
இவர்களின் நிகழ்காலமே / கரிந்து போய்விட்டதைக்
காணவில்லையா ? நீங்கள்'' (சுட்டுவிரல் ப.90)

என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார். சிறுவயதிலேயே தனக்காக வாழ முடியாமல் வறுமை காரணமாகக் குடும்பத்திற்காகத் தன் வாழ்க்கை யையே அழித்துக் கொள்ளும் பிஞ்சுக் குழந்தைகளின் நிலையை அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். தன்னை இருட்டாக்கிப் பிறருடைய வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்தும் இவர்களுடைய வாழ்க்கைக்காக யார் போராடுவது? என்ற கேள்விக்கணையையும் கீழ்க்கண்ட கவிதையில் விடுக்கிறார்.

"வருடம் தவறாமல் / குழந்தைகள் தினத்தைக்
கொண்டாடுகிறவர்களே / தினங்களைக் கொண்டாடுவதை
விட்டுவிட்டுக் / குழந்தைகளை எப்போது
கொண்டாடப் போகிறீர்கள் ?'' (சுட்டுவிரல் ப.90)

என்ற வினாவின் மூலம் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்காமல் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுவதால் யாருக்கு இலாபமென சமுதாயத்தைச் சாடுகிறார். மனிதநேயமற்ற போக்கு நம் சமுதாயத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற சூழலை இதன்மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

**சாதிய சிக்கல்கள்**

சமுதாயத்தைச் சீர்குலைத்துவரும் கொடுமைகளில் தலையாயது சாதிக்கொடுமை. மனிதன் தோன்றிய காலம் முதல் இன்றுவரை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சாதிப்பிரிவால் பலவகையான துன்பங்களை அனுபவித்து வருகிறான். செய்யும் தொழிலால் இன்று சாதிப்பிரிவுகள் இல்லை. அவை நீங்கி பலகாலம் ஆகிவிட்டன என்பதை,

> **"உன்குலத் தொழிலைத்தான் / செய்துகொண்டிருக்கிறாயா நீ,**
> **உஞ்ச விருத்தி செய்துதான் / உயிர் வாழ்கிறானா பிராமணன்?**
> **ஆட்சிபீடம் தவிர / வேறெங்கும் அமர்வதில்லையா சத்திரியன்**
> **வைசியன் மட்டும்தான் / தராசு பிடிக்கிறானா?**
> **ஏர் ஓட்டுகிறவனெல்லாம் / சூத்திரனா? (சுட்டுவிரல் பக்.26,27)**

என்று கவிஞர் வினா தொடுக்கிறார். நம்நாடு சாதியச் சாக்கடையில் இன்றுவரை உழல்கிறது. நாட்டில் சாதிய சிக்கல்கள் ஆதிக்கம் கொள்வதால் எங்கும் மோதல்களும், வன்முறைகளும் ஏற்படுகின்றன.

இந்திய ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளும், ஆன்மீக மையங்களும், அதிகார வர்க்கங்களும் சாதியப்போக்கில் பிழைப்பு நடத்தும் கீழ்த்தரமான நடைமுறைகளைக் காணமுடிகிறது. இவை ஒழிக்கப்படல் வேண்டும். சாதாரண மக்களும் நல்லதோர் நிலையை அடைய வேண்டும். இதனை,

> **"உன் ரத்தத்தை கிளறிப்பார்**
> **நீயும் ஒரு சமுத்திரம் என்பதை அறிவாய்**
> **சமுத்திரத்தில் ஏது நதிகளின் விலாசம்" (சுட்டுவிரல் ப.25)**

என்ற வரிகளின் மூலம் கடலில் வந்து சங்கமிக்கும் நதிகளின் விலாசம் யாருக்கும் தெரியாததுபோல சாதி முகவரி மனித இனங்களில் தெரிவதில்லை என்கிறார் கவிஞர்.

**மதக்கலவரம்**

சாதிகளின் அடிப்படையில் உருவாகும் பிரச்சினைகள் வழியாக ஏற்படும் சிறு அழிவுகள் மதம் என்ற பெயரில் பெரிய அளவில்

அகிலமும் அழிந்துவிடும் நிலை உருவாகிவிடுகிறது. யாராக இருந்தாலும், எம்மொழி பேசும் இயல்புடையவராக இருந்தாலும் தனக்குள் பிரிவின்றி நாம் இந்தியர் என்ற உணர்வுடன் வாழ்தல் வேண்டும். உலகில் மதங்கள் இல்லாத நாடுகள் இல்லை. மதம் என்பது மனிதனை மனிதனாக மாற்றி நல்ல ஒழுக்கத்துடன் வாழச் செய்ய உருவாக்கப்பட்டதே. ஆனால் மனிதன் அடிப்படை மறந்து மதத்தின் பெயரால் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு ரத்தவெள்ளத்தில் சாகின்றனர். அந்தப் புண்ணிய நதிகளில் பாவங்களைக் கழுவுங்கள் என்பதை,

> "வானிலை அறிக்கை இன்றி
> எதிர்பாராமல் பெய்கிறது / ரத்த மழை
> ............
> கோயிலின் மீதும் / மசூதியின் மீதும்
> சர்ச்சின் மீதும் / வேறுபாடின்றிப் பெய்கிறது" (சுட்டுவிரல் ப.107)

என்ற கவிதை வரிகளில் எந்த மதத்தின் அடையாளச் சின்னமாக இருந்தாலும் அங்கு மழையானது எந்தவித பாகுபாடுமின்றி பெய்கிறது. பிறகு புண்ணிய நதிகளாய் ஓடுகிறது. அந்நீரில் பாவங்களைக் கழுவுங்கள் என்று கடுமையாகச் சாடுகின்றார்.

**பெண்கள் நிலை**

பெண்ணாகப் பிறப்பதற்கு பெரும்பேறு செய்து இருக்க வேண்டும் என்பதை கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,

> "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
> மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்று சுட்டுவார். ஆணுக்குப் பெண் சமம் என்ற கூற்று இதுவரை ஏட்டில் மட்டுமே உள்ளது. இயந்திர மயமான 21-ஆம் நூற்றாண்டில் கூட பெண்களுக்குப் புகலிடங்கள் குறைவு. வரதட்சணைக் கொடுமையால் பெண் நெருப்புக்கு இரையாவது நாளுக்குநாள் அதிகமாகி வருவது வருத்தத்திற்குரியது. பெண்களுக்கும் நெருப்புக்கும் நீண்டகால பகை இருப்பதைக் கவிஞர் குறிப்பிடுகிறார். சமுதாயம் பெண்களுக்கென விதித்துள்ள பல கட்டுப்பாடுகளை உடைத்தெறிய முன்வர வேண்டும் என்ற கருத்தை தம் கவிதையில் பதிவு செய்துள்ளார்.

> "அவள் / எரிந்துகொண்டே இருக்கிறாள்
> இன்றல்ல / நேற்றல்ல
> நெருப்புக்குள் அவள் / அவளுக்குள் நெருப்பு" (சுட்டுவிரல் ப.9)

பெண்கள் காலம்காலமாக ஆண்களின் ஆதிக்க உணர்விற்கு அடிமைப்பட்டுத் தங்களை அழித்து ஆண்களின் வாழ்க்கைக்கு வழி அமைத்துக் கொடுக்கின்ற அவலத்தையே இக்கவிதை எடுத்துக்காட்டு கிறது.

**"அவனால் எரிகிறாள் / அவனுக்காக எரிகிறாள்**
**அவனோடு எரிகிறாள் / ஒன்று**
**சேர்ந்து எரியலாம் / அல்லது**
**தனித்து எரியலாம் / எப்படியும் அவள்**
**எரிந்தாக வேண்டும்"** (சுட்டுவிரல் ப.9)

என்று கூறுவதன் மூலம் பெண் என்பவள் ஆணுக்காக, ஆணின் வளர்ச்சிக்காகப் படைக்கப்பட்டவள் என்ற எண்ணம் மரபில் மிக ஆழமாகப் பதிந்துவிட்டத் தன்மையை இக்கவிதை எடுத்துக்காட்டு கிறது. இக்கொடுமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல, என்று சமுதாய அமைப்பு உருவாகி ஆணாதிக்கச் சிந்தனை தலைதூக்க ஆரம்பித்ததோ அன்றே இதுவும் ஆரம்பிக்கத் துவங்கிவிட்டச் சூழலை இதிகாச, புராணங்கள் வழி அறிய முடிகிறது.

**"அவள் வழக்குகளில் / நெருப்புகளில்**
**வெவ்வேறு பாத்திரம்**
**.................**
**இலங்கையில் ஒரு முறை / அவளுக்காக**
**வாதாடிப் பார்த்தது / மதுரையில் ஒருமுறை**
**நீதிபதியானது / ஆனால்**
**அதிகமாகக் / குற்றவாளிக் கூண்டிலேயே**
**நிற்கிறது"** (சுட்டுவிரல் ப.10)

என்று பெண்களின் நிலையை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும்,

**"கௌரவர்களுக்குள்ளேயே நடந்த**
**கலவரத்தில் / குருச்சேத்திரம்**
**சுலபமாக முடிந்துவிட்டது"** (சுட்டுவிரல் ப.53)

என்பதன் மூலம் எத்தகைய பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு உண்டு என்னும் கருத்தினைச் சமுதாயத்தின் முன் வைக்கிறார்.

## அரசியல் நிலை

இன்றைய அரசியல் நீதியையோ, தர்மத்தையோ சார்ந்ததல்ல. சாதியையும், சண்டையையும், பிரச்சினைகளையும் சார்ந்தது.

அரசியலினால் பல்வேறு பயன்களை அடைவது மக்கள் அல்ல, அநீதியை விரும்புகின்ற அரசியல்வாதிகள் என்பதை,

**"தலைவர்கள் செத்தால் / தெய்வம் ஆகிவிடுகிறார்கள்
பிறகு / புதிய மதம் ஒன்று பூக்கிறது / புதிய பூசாரிகள்
..........
காணிக்கை உண்டியலோடு / பிறகு ஒவ்வொரு சமாதியும்
மேடையாகி விடுகிறது / ஒவ்வொரு மேடையும்
சமாதியாகி விடுகிறது"**

**(சுட்டுவிரல் ப.75)**

எனவே இவர்களால் வளர்க்கப்படுவது சாதி, மத, இனச்சண்டைகளே என்கிறார். இன்றைய நாட்களில் அரசியல் கட்சிகள் மிகுதியாக உருவாகி வருகின்றன. அரசியல்வாதிகள் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு எந்தக் கட்சியில் செல்வாக்கு அதிகமாக இருக்கிறதோ, அந்தக் கட்சிக்கு மாறுகிறார்கள். பதவிக்காகவும், பணத்திற்காகவும் எந்தச் சாக்கடையிலும் இறங்குவதற்குத் தயாராக இருப்பதை இவருடைய கவிதைப் புலப்படுத்துகிறது.

நடப்பியல் சிக்கல்களைத் தன் கவிதைகளில் சுட்டிக்காட்டும் கவிஞர் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளையும் பல கவிதைகளில் பதிவு செய்துள்ளார். குழந்தைத் தொழிலாளர் அவலம் ஒழிந்து குழந்தைகள் அவரவர் இயல்புக்கேற்ப வளரும் நிலை ஏற்பட வேண்டுமென வலியுறுத்துகிறார். சாதிப்பாகுபாடுகள் ஒழிந்து ஓரினமாக மக்கள் வாழவேண்டும் என்ற சிந்தனையை முன் வைக்கிறார். பெண்களின் நிலை காலந்தோறும் மாறாமலிருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்நிலை இனி மாறும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறார். மொத்தத்தில் மனிதனின் மனிதநேயம் மேம்பட வேண்டுமென்ற உயரிய நோக்கு அப்துல்ரகுமான் கவிதைகளில் வெளிப்படுகிறது.